# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No. 30 /2020

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 –ம் நாள் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. T. இந்திரஜித், Bench Clerk (Gr–III) – I/C அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 06.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராசமாணிக்கம் (DW 1) | வயது | : | 53/2025 |
| க/த பெயர் | : | திரு. உத்திராபதி | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | பாலையூர் | வட்டம் | : | முத்துப்பேட்டை |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) வாதி எனது தம்பி மனைவி என்றால் சரிதான். எனது அப்பா உத்திராபதி எப்போது இறந்தார் என்றால் 2001 வாக்கில் இறந்தார். எனது அப்பாவிற்கு எத்தனை குழந்தைகள் என்றால் நான்கு மகன்கள், இரண்டு மகள்கள். வாதியின் கணவர் உத்திராபதிக்கு எத்தனையாவது குழந்தை என்றால் எனக்கு அடுத்த குழந்தை. தாவா சொத்து எனது பெற்றோர் விட்டு சென்ற சொத்தா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் மூன்றாம் தரப்பினருக்கு சொந்தமான சொத்தாக இருந்து கிரயம் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான்.
2) எனது தம்பி குமார் என்ன வேலை பார்த்து வருகிறார் என்றால் வெளிநாடு செல்வதாக சொன்னவர் சென்னையில் தங்கியுள்ளார். குமார் குடும்பம் சென்னையில் வசித்து வந்து இங்கு அடிக்கடி வந்து செல்வார் என்றால் சரிதான். தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் பாலையூர் கிராமத்தில் உள்ளது. அதன் சர்வே எண் என்னவென்றால் 124/9 இல் 22 செண்ட்டும், 440/37 இல் 6 செண்ட்டும், 440/29 இல் 4 செண்ட்டும் உள்ளது. எத்தனை அயிட்ட சொத்துக்களில் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 1, 2 அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.
3) 1 , 2 அயிட்ட தாவா சொத்துக்களும் பூவம்மாளுக்கு சொந்தமான சொத்துக்கள் என்றால் சரிதான். வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல்

வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்கண்ட ஆவணங்களை பார்க்காமல் தான் வழக்கு நடத்துகிறேனா என்றால் மேற்கண்ட ஆவணங்களை பார்க்கவேண்டி இந்நீதிமன்றத்தில் மனு கொடுத்துள்ளேன். 1 , 2 அயிட்ட சொத்துக்களுக்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்பதை காண்பிக்க வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் இல்லை.

4) 1 , 2 அயிட்ட சொத்துக்கள் எனக்கு சொந்தம் என்பதை காண்பிக்க பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஏதேனும் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்துக்களை கிரய ஒப்பந்தம் மூலம் பெறப்பட்டு எனது அனுபவத்தில் இருந்து வருவதுதான் எனது கட்சி என்றால் சரியல்ல. **(தற்போது சாட்சியானவர் சரி என்று சாட்சி அளிக்கிறார்.)** எனது கட்சியை நிரூபிப்பதற்கு பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

5) பி.சா.ஆ.7 ஆவணத்தில் வாதியானவர் எங்களுக்கு தாவா சொத்துக்களை விற்பனை செய்ய கிரய உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிரய ஆவணம் ஏற்படுத்திக் கொண்டோமா என்றால் இல்லை. மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் நீதிமன்றத்தின் மூலம் கிரயம் மேற்கொள்ள வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

6) பி.சா.ஆ.7 ஆவணமானது மோசடியானது என்றும், தாவா சொத்துக்களை வாதியானவர் விற்பனை செய்வதற்கு அவசியம் இல்லை என சொல்லி வாதியானவர் எங்களுக்கு சட்ட அறிவிப்பு பி.சா.ஆ-6 யை அனுப்பினார் என்றால் சரிதான். நாளது தேதி வரை வாதி மீது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வேண்டி எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதியன் கணவர் தாவா சொத்தை கிரயம் வாங்கும்போது என்னை துணைக்கு அழைத்து சென்றதால் தாவா சொத்தை உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் தாவா சொத்துக்கும் எந்தவித உரிமையும் இல்லை என்றும் தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல.

7) நான் தாவா சொத்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் செயல்பட்டுவருவதால் வாதியானவர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இரத்த உறவை தவிர தாவா சொத்திற்கு எனக்கு

எந்தவித பாத்தியமோ அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் தாவா சொத்துக்கள் இதர சொத்துக்கள் அனைத்தும் ஆக்கிரமித்துக் கொள்ளும் எண்ணத்தில் எனக்கு தெரிந்த நபர்களின் உதவியுடன் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.06 16:27:33 +0530

District Munsif
Mannargudi.